**ஏர் இந்தியா விமான விபத்து குறித்து டெய்லி மெயிலில் வந்த அறிக்கை தொடர்பான ஊடக கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளரின் பதில் (ஜூலை 23, 2025)**

ஜூலை 23, 2025

ஏர் இந்தியா விமான விபத்து குறித்து டெய்லி மெயிலில் வந்த அறிக்கை தொடர்பான ஊடக கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில், அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. ரந்திர் ஜெய்ஸ்வால் அவர்கள் கூறுகையில்:

அறிக்கையை நாங்கள் பார்த்துள்ளோம் மற்றும் இந்த பிரச்சனை எங்கள் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட தருணத்திலிருந்து இங்கிலாந்து தரப்புடன் நாங்கள் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். இந்த துயரமான விபத்தை அடுத்து, நிறுவப்பட்ட நெறிமுறைகள் மற்றும் தொழில்நுட்ப தேவைகளின்படி பாதிக்கப்பட்டவர்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அடையாளம் காண்பித்தனர் . இறந்த அனைத்து நபர்களும் மிகவும் தொழில்முறையுடன் கண்ணியமாக மரியாதை உடன் கையாளப்பட்டனர். இது தொடர்பான எந்தவொரு பிரச்சனைகளையும் தீர்க்க UK அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்ந்து பணியாற்றுகிறோம்.

புது தில்லி

ஜூலை 23, 2025